SREE Annapoorna SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering


# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 19 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, ஆகஸ்ட் 6 - 12, 2023, 8 பக்கங்கள், ரூ.5/- ஆண்டு சந்தா - ரூ.260/-


ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்ரிங்

## பி.எஸ்.ஜி யின் முதல் குழந்தை

# சர்வஜன பள்ளியின் நூற்றாண்டு விழா

✍ ச.சுரேஷ், தி கோவை மெயில்

பி.எஸ்.ஜி சர்வஜன மேல்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு தொடக்க விழா புதன் கிழமை நடைபெற்றது. இந்த விழாவின் சிறப்பு விருந்தினராக பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்துகொண்டார். பி.எஸ்.ஜி நிர்வாக அறங்காவலர் L.கோபால கிருஷ்ணன் தலைமை தாங்கினார். இந்த விழாவில் மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார், மாநகராட்சி ஆணையர் பிரதாப், சர்வஜன பள்ளி தலைமை ஆசிரியர் சசிகுமார், செயலர் நாராயணசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் நிர்வாக அறங்காவலர் L.கோபால கிருஷ்ணன் தலைமையுரை ஆற்றினார். அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார்.

மேலும் இந்த விழாவில் மாணவர் இல்லத்தின் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இந்த பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பள்ளி கல்வித்துறை அமைச்சர் நினைவு பரிசை வழங்கினார்.




பி.எஸ்.ஜி. மாணவர் இல்லத்தின் இணை வளாகத்தின் கல்வெட்டை திறந்து வைக்கிறார் அமைச்சர் அன்பில் மகேஷ். உடன் (இடமிருந்து) மாநகராட்சி ஆணையர் பிரதாப், மாவட்ட ஆட்சியர் கிரந்தி குமார், பி.எஸ்.ஜி. அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் கோபாலகிருஷ்ணன் மற்றும் தலைமை ஆசிரியர் சசிகுமார்.



# யாதும் ஊரே யாவரும் கேளிர் பி.எஸ்.ஜி மாணவர்கள் எடுத்துக்காட்டு

### பி.எஸ்.ஜி நிர்வாக அறங்காவலர் L.கோபாலகிருஷ்ணன்

அனைத்து மக்களும் (சர்வ ஜனங்கள்) தரமான உயர்கல்வியை வழங்க வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு 1924 லில் பி.எஸ்.ஜி அறக்கட்டளையின் முதல் குழந்தையாக தொடங்கப்பட்டது தான் சர்வஜன பள்ளி. தற்போது பி.எஸ்.ஜி அறநிலையத்தின் 33 நிறுவனங்கள் மருத்துவம், கல்வி மற்றும் தொழில் சார்ந்து செயல்பட்டு வருகிறது. பி.எஸ்.ஜி அறநிலையத்தின் கல்வி நிறுவனங்களில் இன்று 35000 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவை அனைத்திற்கும் முதன்மையானது சர்வஜன பள்ளி தான்.

இந்த பள்ளி 7 ஆசிரியர்கள் மற்றும் 170 மாணவர்களுடன் தொடங்கப்பட்டு, தற்போது 81 ஆசிரியர்கள், 2000 மாணவர்களுடன் செயல்பட்டு வருகிறது. தொடங்கிய காலத்திலிருந்தே பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களின் அறிவு மேம்பட முக்கியத்துவத்தை அளிக்கிறது.

ஆதரவற்ற மாணவர்களின் வாழ்வு மேம்பட வேண்டும் என்ற நோக்கில், மாணவர் இல்லத்தை பள்ளி வளாகத்திலேயே தொடங்கினோம். இன்று மாணவர் இல்லத்தில் 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கியுள்ளனர். பி.எஸ்.ஜி அறநிலையம் ஆதரவற்ற மாணவர்களுக்கு கல்வி சேவை வழங்குவதுடன் வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தி தருகிறது. நம் அறநிலையத்தின் மாணவர்கள் உலகெங்கிலும் பணிபுரிந்து வருகின்றனர். அவர்கள், "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்பதை நிரூபிக்கின்றனர்.

பின் தங்கியுள்ள கிராமங்களிலுள்ள நீர்நிலைகளை தூர்வாருதல், மருத்துவமுகாம் நடத்துதல் போன்ற சமூகப்பணிகள் பி.எஸ்.ஜி அறநிலையம் சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. சிறப்பு கவனிப்பு தேவையான குழந்தைகளுக்கு விஷ்ணு கிராந்தி பள்ளி அமைத்து பராமரித்து வருகிறது. இதில் 100 குழந்தைகள் பயன்பெறுகின்றனர். இதுபோன்ற சமூக பணிகளில் பி.எஸ்.ஜி தொடர்ந்தது செயல்பட்டு வருகிறது.

**நூற்றாண்டு விழா**

இந்த சர்வஜன பள்ளி நூற்றாண்டை முன்னிட்டு 5 அரசு பள்ளிகளை தேர்ந்தெடுத்து அப்பள்ளிகளில் சுத்தமான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி வழங்கப்படவுள்ளன. மேலும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களும் பி.எஸ்.ஜி மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை நடத்த முடிவு செய்துள்ளோம்.

நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில் மாவட்ட அளவிலான தொடர் ஓட்டப்போட்டி, பிளாஸ்டிக் இல்லாத மாவட்டத்தை உருவாக்குவது, சுற்றுசூழல் விழிப்புணர்வு பேரணி நடத்தப்படவுள்ளன. கோவையின் சிறப்பை போற்றும் வகையில் பேச்சுப்போட்டி, அறிவியல் கண்காட்சி, வினாடிவினா, புகைப்படப்போட்டி, குறும்படப்போட்டி, ஓவியப்போட்டி மற்றும் கலைநிகழ்ச்சிகள் போன்றவை நடத்த முடிவு செய்துள்ளோம்.

விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட அளவிலான கைப்பந்து, கால்பந்து, ஹாக்கி போட்டிகளை நடத்தவுள்ளோம். இதைத்தவிர மாணவர் நலன் கருதி தமிழகத்தின் மிகச்சிறந்த பேச்சாளர்களை அழைத்து கருத்தரங்கம் நடத்த முடிவு செய்துள்ளோம்.

# காலத்திற்கேற்ப கல்வி கற்பிக்க வேண்டியது அவசியம்

### பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி

இந்த பள்ளி விழாவில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் என்ற பொறுப்போடு கலந்துகொள்வதை நான் பெருமையாக கருதுகிறேன். நீதிக்கட்சியின் முக்கியமான தலைவராக இருந்தவர் A.P பாத்ரோ. அவர் அடிக்கல் நாட்டிய இந்த பள்ளியில் நீதிக்கட்சியின் வழியில் திராவிட மாடல் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கும் முதலமைச்சரின் அறிவுரையின்படி இந்த நிகழ்விலே கலந்து கொண்டிருக்கிறேன்.

தந்தை பெரியார் வந்து சென்ற பள்ளி இது. 1926 யில் இரவீந்தரநாத் தாகூர் வருகை புரிந்தார். அவரின் குரலிலேயே "ஜன கன மன" பாடலை இப்பள்ளியில் பாடிய சிறப்பு தமிழகத்தில் வேறு எந்த பள்ளிக்கும் இல்லை. சர்வஜனம் என்ற பெயர் மகாத்மா காந்தியாலும், முன்னால் பிரதமர் இந்திரா காந்தியாலும் பாராட்டப்பட்ட ஒன்று.

தீபாவளி பண்டிகையன்று பாட்டசு வெடித்து, புதிய ஆடைகள் அணிந்து சந்தோசமாக கொண்டாடுவோம். ஆனால் 1921 யில் தீபாவளியன்று பீளமேட்டை சார்ந்த மக்கள், மேல்நிலை பள்ளிக்கு செல்வதென்றால் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது. அருகிலேயே மேல்நிலைப்பள்ளி அமைத்து தரக்கோரி பி.எஸ்.ஜி சகோதரர்களிடம் கோரிக்கை வைத்தனர். அதன் அடிப்படையில் 1921 யில் முடிவெடுக்கப்பட்டு, 1922 யில் அடிக்கல் நாட்டப்பட்டு ஜூன் 4, 1924 ல் தொடங்கப்பட்டது தான் இந்த சர்வஜன பள்ளி என்பதை அறியும் போது பெருமையாக உள்ளது.

குறிப்பாக பள்ளிக்கூடத்தின் கட்டடப்பணியின் போது வெளிநாடுகளில் இருந்து வந்த கட்டடப்பணிக்கு தேவையான பொருட்களை காண்பதற்க்கே மக்கள் வந்தனர் என்பது வியக்கத்தக்கது. தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை பள்ளியை நடத்துவது என்பது சுலபமான ஒன்றல்ல. ஜாதி, மதத்தையெல்லாம் கடந்து எல்லோருக்கும் எல்லாம் என்பதன் அடிப்படையில் அனைத்து மக்களுக்கும் கல்வி சேர வேண்டும் என செயல்பட்டு வரும் சர்வஜன பள்ளிக்கு, பள்ளி கல்வித்துறை அமைச்சர் என்ற முறையில் எனது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

ஒரு காலத்தில் இந்த பீளமேடு பகுதியில் எந்த ஒரு அடிப்படை வசதி கூட இல்லாமல் இருந்தது. அப்படிபட்ட ஒரு இடம் கோவையின் முக்கியமான ஒரு பகுதியாக மாறியிருக்கிறது என்றால், இது போன்ற கல்விநிலையங்கள் தான் காரணம். காலம் என்பது மாறிக்கொண்டே உள்ளது. காலத்திற்கேற்ப மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பது தான் அவசியம்.

இன்றைய காலகட்டத்தில் STEM என்ற கல்வி முறையை அரசுப்பள்ளிகள் பயன்படுத்துகின்றன. கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் தொழில் நிறுவங்கள் நன்றாக செயல்பட பள்ளிக்கல்வித்துறை முக்கியப்பங்கு வகிக்கிறது. அந்த வகையில் தான் 'தொழில் நிறுவனங்கள், விவசாயம், கல்வி நிறுவனங்களுக்கு இந்த நிறுவனம் அதிகப்படியான முக்கியத்துவம் வழங்கும் என்று நம்புகிறேன்' என்று தந்தை பெரியார் அன்றே இந்த நிறுவனத்தை பற்றி குறிப்பு எழுதியுள்ளார். முதலமைச்சர் People Service Good என்பது தான் PSG என்று பாராட்டியுள்ளார்.

நான் அனைத்து பள்ளிகளிலும் பெற்றோர்களுக்கு வைக்கும் வேண்டுகோள் என்னவென்றால், நமது குழந்தைகளை மற்ற மாணவர்களோடு ஒப்பிடாதீர்கள் என்பது தான். நம்மளுடைய பிள்ளைகளுக்கென்று தனித்திறமை உண்டு. அதனை கண்டறிந்து ஊக்குவிப்பது தான் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் கடமை.


மாணவர்கள் ஆசிரியர்களின் அறிவுரைகளையும், பெற்றோர்களின் அறிவுரைகளையும் கேட்டு நடந்து கொள்ளவேண்டும். இந்த வயது தான் படிப்பின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டிய வயது.











# கை கோர்க்கும் ஓ.பி.எஸ்-டிடிவி

## எடுபடுமா எடப்பாடி வியூகம்?



✍ **சாணக்கியன்,** தி கோவை மெயில்

முன்னால் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அமமுக பொதுச்செயலர் டிடிவி.தினகரன் ஆகியோர் இணைந்து செயல்பட தொடங்கியுள்ளதால் அவர்கள் பின்னால் முக்குலத்தோர் வாக்குகள் திரளுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அதிமுகவை ஆட்டுவிக்கும் சக்தியாக இருந்த வி.கே.சசிகலா, டி.டி.வி.தினகரன், ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் அடுத்தடுத்து கட்சியில் இருந்து ஓரங்கட்டப்பட்டது தென்மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்கள் மட்டுமன்றி பிறபகுதிகளில் வாழும் முக்குலத்தோர் மத்தியில் ஒருவித அதிருப்தி உருவாக்கியுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கு அரசியல் கட்சிகள் ஆயத்தமாகி வரும் நிலையில் தங்கள் பலத்தை நிரூபித்து ஆக வேண்டும் என்ற வேகத்தில் முக்குலத்தோர் இருப்பதை தென்மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓபிஎஸ், டிடிவி ஆகியோர் தனித்தும், இணைந்தும் நடத்தும் கூட்டங்களில் இருந்து உணர முடிவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

திருச்சியில் ஓபிஎஸ் நடத்திய மாநாடு, ஒரத்தநாட்டில் ஓபிஎஸ் ஆதரவாளர் வைத்திலிங்கம் திருமண வீட்டில் கூடிய ஆயிரக்கணக்கான கூட்டம், டிடிவி நடத்திய மாநாட்டில் திரண்ட பிரம்மாண்ட கூட்டம் ஆகியவையே இதற்கு சாட்சி.

பொதுவாக தமிழகத்தில் அரசியல் விழிப்புணர்வு மிக்க சமூகங்களில் முக்குலத்தோர் (கள்ளர், மறவர், அகமுடையார்) சமூகம் முக்கியமானது. இதில் கள்ளர் டெல்டா மாவட்டங்கள், சிவகங்கை, மதுரை, தேனி மாவட்டங்களில் அடர்த்தியாக வசிக்கின்றனர். அகமுடையார் டெல்டா மாவட்டங்கள், சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களிலும், மறவர் பிரிவினர் விருதுநகர், ராமநாதபுரம், தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் அடர்த்தியாக வசிக்கின்றனர். 1931 இல் ஆங்கிலேயர் காலத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி முக்குலத்தோர் 9 சதவீதம் என்றாலும், அம்பா சங்கர் குழு அறிக்கைபடி 6.8 சதவீதமாக உள்ளனர்.

காமராஜர் காலத்தில் அரசியலில் அதிகாரமிக்க சமூகமாக இருந்த இவர்கள், முத்துராமலிங்க தேவர் பார்வர்டு பிளாக் கட்சியை நடத்தினாலும் அவர் பின்னால் அதிகபட்சம் 1.5 சதவீதம் மட்டுமே திரண்டனர். இருப்பினும், 1967 இல் பேரவைத் தேர்தலில் காமராஜரை தோற்கடிக்க, முத்துராமலிங்கத் தேவரை பயன்படுத்தி இந்த வாக்குகளை திமுக ஒன்று திரட்டியது.

பின்னர் திமுகவில் இருந்து எம்ஜிஆர் வெளியேற்றப்பட்டபோது திண்டுக்கல் இடைத்தேர்தலில் முத்துராமலிங்கத்தேவரை மையமாக வைத்து அதிமுக மிகப்பெரிய வெற்றியை பெற்றது. அதன்பின்னர் முக்குலத்தோர் பெரும்பாலும் அதிமுகவை தங்களது சொந்தக் கட்சியாகவே பார்க்கத் தொடங்கினர். இருந்தாலும், டெல்டா மாவட்ட முக்குலத்தோர் திமுகவையே தொடர்ந்து ஆதரித்து வருகின்றனர்.

எம்.ஜி.ஆருக்கு எதிராக முன்னால் அமைச்சர் எஸ்.டி.சோமசுந்தரம், ஜெயலலிதாவுக்கு எதிராக சு.திருநாவுக்கரசர் ஆகியோர் தனிக்கட்சி தொடங்கினாலும் முக்குலத்தோர் வாக்குகளை அதிமுகவில் இருந்து பெரிய அளவில் பிரிக்க முடியவில்லை.

எம்.ஜி.ஆருக்கு பிறகு அதிமுக தலைமை பொறுப்புக்கு ஜெயலலிதா வந்த பிறகும் அவரது தோழியான சசிகலாவை மையமாக வைத்து அதுவரை அல்லாத அளவுக்கு முக்குலத்தோர் அதிமுகவை நோக்கி திரண்டனர். கிட்டதட்ட 30 ஆண்டுகள் அதிகபட்ச அதிகாரத்தில் முக்குலத்தோர் இருந்தனர். ஜெயலலிதா அமைச்சரவையில் 8 முக்குலத்தோர் அமைச்சர்கள் இருந்தனர்.

அவரது மறைவுக்குப்பின் அந்த சமூகத்தை சேர்ந்த ஓ.பன்னீர்செல்வம் முதல்வராகவும், சசிகலா பொதுச்செயலராகவும் மாறினர். ஆனால், பன்னீர்செல்வத்தை பதவியில் இருந்து இறக்கி எடப்பாடி பழனிசாமிக்கு முதல்வர் பதவியை சசிகலா கொடுத்துவிட்டு சிறைக்குச் சென்றபின்னர் அதிமுகவில் முக்குலத்தோர் அதிகாரம் படிப்படியாக பறிபோனது.

முதலில் சசிகலா, பின்னர் டி.டி.வி., தொடர்ந்து ஓபிஎஸ் என முதல்நிலை அதிகாரத்தில் இருந்த முக்குலத்தோர் வீழ்த்தப்பட்டது ஒரு வித அதிருப்தியை உருவாக்கியுள்ளது. அதிமுகவில் இருந்து வெளியேறிய தினகரன், அமமுக கட்சியை தொடங்கி ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் 53 சதவீத வாக்குகளுடன், அதிமுக, திமுக இரண்டையும் வீழ்த்தி வெற்றி பெற்றதும் அவர் பின்னால் இந்த சமூகத்தினர் திரளத் தொடங்கினர்.

2019 மக்களவைத் தேர்தலில் இது தெளிவாக தெரிந்தது. 2019 இல் தினகரன் 5.5 சதவீத வாக்குகளை பெற்றார். 2021 பேரவைத் தேர்தலில் சசிகலாவின் தவறான வியூகம் செய்ததால் தினகரன் வாக்குகள் குறைந்து அமமுக 2 சதவீதத்துக்கு சுருங்கியது. இருப்பினும் நிர்வாகிகள் பலமுள்ள கட்சியாக அமமுக இப்போதும் உள்ளது. இப்போது ஓபிஎஸ், டிடிவி இணைந்து செயல்படுவதால் 2019 இல் அமமுகவுக்கு கிடைத்த வாக்குகளைவிட கூடுதலாக பெறக்கூடிய வாய்ப்புள்ளது. அதிமுகவில் நத்தம் விசுவநாதன், திண்டுக்கல் சீனிவாசன், ஆர்.பி.உதயகுமார் ஆகியோருக்கு முக்கிய பொறுப்புகள் கொடுத்தாலும், சசிகலா, தினகரன், ஓபிஎஸ் போல அதிமுகவை இயக்கும் பொறுப்பு தங்களிடம் இல்லையே என்ற அதிருப்தியை இந்த சமூகத்தினர் வெளிப்படுத்தி வருவதாக தெரிகிறது.

எனவே, 2024 மக்களவைத் தேர்தலில் ஓபிஎஸ், தினகரனை பலப்படுத்தினால் மட்டுமே தங்களால் தமிழக அரசியலில் அதிகாரமிக்க சக்தியாக மாறமுடியும். இதுவே தங்களுக்கு கடைசிவாய்ப்பு என்ற எண்ணவோட்டம் அவர்களுக்கு உருவாகியுள்ளது.

ஆளும் கட்சியான திமுகவிலும் 4 அமைச்சர்கள் மட்டுமே முக்குலத்தோருக்கு வழங்கப்பட்டுள்ளதால் திமுக மீதும் அவர்களுக்கு பெரிய அளவில் பிடிமானம் இல்லை. இருப்பினும், எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் திமுக, அதிமுக இடையே கடும் போட்டி உருவானால் எடப்பாடியை வீழ்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் முக்குலத்தோர் திமுகவையும் ஆதரிக்கக்கூடும்.

அமமுக, ஓபிஎஸ், பாமக கூட்டணி உருவாகி அது மாநிலம் தழுவிய அணியாக மாறி பலமுறை போட்டி உருவானால் அவர்கள் அமமுக ஓபிஎஸ் பக்கமே முழுமையாக திரண்டு நிற்கவும் வாய்ப்பு உண்டு. தேர்தல் நெருங்கும்போது ஏற்படும் அரசியல் சூழலை மையமாக வைத்து தான் முக்குலத்தோர் வாக்குகள் எந்தப்பக்கம் நகரும் என்பதை முழுமையாக கணிக்க முடியும். இதையெல்லாம் கணக்கு போட்டு தான் தன் மீதான முக்குலத்தோர் எதிர்ப்பை குறைக்கும் வகையில் மதுரையில் மாநாடு நடத்த ஆயத்தமாகி வருகிறார் எடப்பாடி பழனிசாமி.

### திமுகவின் பி டீம் ?

இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, தமிழகம் முழுவதும் முக்குலத்தோர் அதிமுக எதிர்ப்பு குறிப்பாக எடப்பாடி பழனிசாமி எதிர்ப்பு என்ற மனநிலையில் உள்ளனர். திமுகவில் இருந்த முக்குலத்தோர் கூட எடப்பாடி மீது எதிர்ப்பு எழுந்துள்ளது. டெல்டா, தென்மாவட்டங்கள் தவிர தென்சென்னை, ஸ்ரீபெரும்புதூர், கோவை, திருப்பூர் மக்களவைத் தொகுதிகளிலும் முக்குலத்தோர் கணிசமாக உள்ளனர்.

தினகரன், பன்னீர்செல்வம் கூட்டணியாக சேர்ந்து கொடநாடு கொலை வழக்கில் ஏன் குற்றவாளிகளை கண்டு பிடிக்கவில்லை என ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். தினகரன், ஓபிஎஸ் ஐ திமுகவின் பி டீம் என அதிமுக பிரசாரம் செய்தாலும், திமுக அதிமுக ரகசியமாக இணைந்து செயல்படுவதால் தான் கொடநாடு கொலை வழக்கில் குற்றவாளிகளை கண்டுபிடிக்கவில்லை என்ற தோற்றத்தை ஓபிஎஸ் தினகரன் ஏற்படுத்தி வருகின்றனர். தங்களது ஆர்ப்பாட்டம் வெற்றி அடைந்ததால் தான் இப்போது புரட்சித் தொண்டன் என்ற பத்திரிகையை ஓபிஎஸ் தொடங்க வுள்ளார். 2021 பேரவைத் தேர்தலில் அமமுக எடுத்த வாக்குகளை மக்களவைத் தொகுதி வாரியாக கணக்கிட்டால் தூத்துக்குடி, ராமதாதபுரம், தென்காசி, சிவகங்கை, விருதுநகர், மதுரை ஆகியவற்றில் 5 முதல் 10 சதவீதம் வரை வாக்குகளை அமமுக பெற்றுள்ளது.

அதேபோல, 2019 மக்களவைத் தேர்தலில் நாகை, மயிலாடுதுறையில் 7, தஞ்சாவூரில் 9, திருச்சியில் 10 , சிவகங்கையில் 11, மதுரையில் 8.5, தேனியில் 12.2., விருதுநகரில் 10, ராமநாதபுரத்தில் 13, தூத்துக்குடியில் 7.7, தென்காசியில் 8.7, திருநெல்வேலியில் 6, திண்டுக்கல், பெரம்பலூர், சிதம்பரத்தில் தலா 5 சதவீதம் என வாக்குகளை அமமுக பெற்றுள்ளது.

இப்போது அமமுகவுடன் ஓபிஎஸ் இணைந்துள்ளதால் கூடுதல் வாக்குகளை பெற முடியும். தேர்தல் நேரத்தில் அமையும் அணியை பொருத்து தான் ஓபிஎஸ்-தினகரன் ஆகியோர் எத்தனை சதவீத வாக்குகளை பெறுவார்கள் என்பதை கணிக்க முடியும்.

**இப்போது ஓபிஎஸ், டிடிவி இணைந்து செயல்படுவதால் 2019 இல் அமமுகவுக்கு கிடைத்த வாக்குகளைவிட கூடுதலாக பெறக்கூடிய வாய்ப்புள்ளது. அதிமுகவில் நத்தம் விசுவநாதன், திண்டுக்கல் சீனிவாசன், ஆர்.பி.உதயகுமார் ஆகியோருக்கு முக்கிய பொறுப்புகள் கொடுத்தாலும், சசிகலா, தினகரன், ஓபிஎஸ் போல அதிமுகவை இயக்கும் பொறுப்பு தங்களிடம் இல்லையே என்ற அதிருப்தியை இந்த சமூகத்தினர் வெளிப்படுத்தி வருவதாக தெரிகிறது.**

## கைத்தறி ஆடையுடன் அணிவகுப்பு



கோவை மக்கள் சேவை மையம் சார்பில், தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு கைத்தறி ஆடையுடன் அணிவகுப்பு நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. தேசிய மகளிரணி தலைவியும், கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான வானதி சீனிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு, அனன்யா குழுமத்தின் இணை நிர்வாக இயக்குநர் உமா மஹேஸ்வரி யுவராஜ், ராம்ராஜ் காட்டன் ஆர்த்திகா ஈஸ்வர் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேரணியை துவக்கி வைத்தனர். இந்த பேரணி ரேஸ்கோர்ஸ் காஸ்மோபாலிடன் கிளப்பில் தொடங்கி, கலெக்டர் பங்களா வரை நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவிகள் கைத்தறி ஆடைகள் அணிந்து பேரணியில் கலந்துகொண்டனர்.



# பி.எஸ்.ஜி. என்றாலே "கிரேட்" தான்

## - நடிகர் நிழல்கள் ரவி பேச்சு



பி.எஸ்.ஜி. மருத்துவமனையின் ஆண்கள் உடல்நல மருத்துவமனை "ஆண்மை" க்ளினிக் நிகழ்வை குத்துவிளக்கேற்றி துவக்கி வைக்கிறார் நடிகர் நிழல்கள் ரவி. உடன் (வலமிருந்து) பி.எஸ்.ஜி. மருத்துவமனையின் இயக்குநர் புவனேஸ்வரன், யூரோலொஜிஸ்ட் அண்ட் அன்ரோலஜிஸ்ட் மருத்துவர் கிருஷ்ண மோகன், யூரோலஜி மற்றும் அன்ரோலஜி துறைத் தலைவர் பூவை முருகன் மற்றும் பி.எஸ்.ஜி. மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல்வர் சுப்பாராவ் ஆகியோர்.

தி கோவை மெயில்

கோவை பீளமேட்டில் உள்ள பி.எஸ்.ஜி. மருத்துவமனையின் சிறுநீரக வியல் துறை சார்பில் ஆண்கள் உடல்நல மருத்துவமனை "ஆண்மை" துவக்க விழா நடைபெற்றது.

பி.எஸ்.ஜி. மருத்துவமனையின் இயக்குநர் புவனேஸ்வரன், பி.எஸ்.ஜி. மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல்வர் சுப்பாராவ், யூராலஜி மற்றும் அன்ரோலஜி துறைத் தலைவர் பூவை முருகன், யூராலொஜிஸ்ட் அண்ட் அன்ரோலஜிஸ்ட் மருத்துவர் கிருஷ்ண மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக திரைப்பட நடிகரும், குரல் கலைஞனருமான நிழல்கள் ரவி மற்றும் சென்னை அப்போலோ மருத்துவமனையின் யூரோ, ஆண்ட்ரோலஜிஸ்ட் மற்றும் ஆண்கள் உடல்நல மருத்துவர் கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பி.எஸ்.ஜி. மருத்துவமனையின் யூரோலொஜிஸ்ட் அண்ட் அன்ரோலஜிஸ்ட் மருத்துவர் கிருஷ்ண மோகன் "ஆண்மை" கிளினிக்கின் நோக்கம் பற்றி பேசுகையில், "இந்தியாவில் இரண்டாவது ஆண்களுக்கான தனி மருத்துவமனையை, பி.எஸ்.ஜி. மருத்துவமனை தொடங்கியுள்ளது. ஆண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விளக்கி அதற்கான தீர்வுகளை சிறந்த கருவிகளுடன் உயர்தர சிகிச்சையை அளிக்க இம்மருத்துவமனை உதவும்," என்றார்.

சென்னை அப்போலோ மருத்துவமனையின் யூரோ ஆண்ட்ரோலஜிஸ்ட் மற்றும் ஆண்கள் உடல்நல மருத்துவர் கார்த்திகேயன் பேசுகையில், "பொதுவாக ஆண்கள் அனைவரும் தனக்கு வரும் ஆண்மை பிரச்சனைகளை வெளியே கொண்டுவராமல் மறைத்து, மனதளவில் பெரிதும் பாதிப்படைகின்றனர். இந்த நிலையை மாற்ற யூரோலொஜிஸ்ட் மற்றும் அன்ரோலஜிஸ்ட் மருத்துவர்களால் மட்டுமே தீர்வுக் காண முடியும். இந்த விழிப்புணர்வை ஆண்களிடம் ஏற்படுத்த ஆண்கள் உடல்நல மருத்துவமனை பி.எஸ்.ஜியில் அமைக்கப்பட்டுள்ளது.

உடல் பருமன், புகை பிடித்தல், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தமுடையவர்களுக்கு இரத்த ஓட்ட பிரச்சனைகளால் விறைப்பு குறைபாடு *(erectile dysfunction)* ஏற்படுகிறது என்றால், அதனை கவனமாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஆண்கள் எதிர்கொண்டு வரும் பாலியல் செயலிழப்பு, ஆண்மை குறைவு, விந்தணுக்களின் எண்ணிக்கை குறைவு, புரோஸ்டேட் புற்றுநோய் , புரோஸ்டேட் விரிவாக்கம், விந்து வெளியான பிறகு ஏற்படும் வலி, டெஸ்டிஸில் வலி போன்ற பிரச்சனைகளுக்கு யூரோலொஜிஸ்ட் மற்றும் அன்ரோலஜிஸ்ட் மருத்துவர்களால் மட்டுமே சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க முடியும். சரியான நோயை தெரிந்துகொள்ளாமல் சிகிச்சை அளிப்பதால் நோய்க்கு தீர்வு காணமுடியாது," என தெரிவித்தார்.

திரைப்பட நடிகர் நிழல்கள் ரவி பேசுகையில், "பி.எஸ்.ஜி. என்றாலே கிரேட் தான், ஏனெனில் நான் படித்ததும் பி.எஸ்.ஜி. கல்லூரிதான். வந்துள்ள இடமும் பி.எஸ்.ஜி. மருத்துவமனை, அத்தகைய இடத்தில் "ஆண்மை" என்னும் மருத்துவமனை அமைந்ததில் பெருமையடைகின்றேன். விறைப்பு குறைபாடு *(erectile dysfunction)* என்பது உணவுப் பழக்கத்தினாலும், மன அழுத்ததினாலும் ஏற்படுகிறது. இதற்கு சிறந்த முறையில் சிகிச்சை பெறுவதற்கு பி.எஸ்.ஜி. மருத்துவமனையில் "ஆண்மை" என்னும் தனிப் பிரிவை, சிறந்த மருத்துவர்களை கொண்டு துவக்கி உள்ளனர். தற்போதைய காலத்தில் இப்பிரச்சினைகளை பற்றி பேசுவதற்கு அனைவரும் பயந்து, தயங்கும் சமயத்தில், ஆண்களுக்கான மருத்துவமனை முதன் முதலில் கோவையில் தொடங்கியுள்ளனர். மென்மேலும் உயர வாழ்த்துகிறேன். என்றார்.







# ஆன்மீக பாதையில் குறுக்கிடும் குழப்பங்களை நான் எப்படி கையாள்வது?

தி கோவை மெயில்

ஆன்மீக பாதையில் நிலவும் குழப்பம் பற்றிய கேள்விக்கு ஆன்மீகம் என்பது "ஏதோ ஒன்றை அடைவது" பற்றி அல்ல என்கிறார் சத்குரு.

கேள்வி: ஆன்மீக பாதையில் நான் நிறைய குழப்பங்களை சந்திக்கிறேன். இந்த குழப்பத்தை நான் எப்படி சமாளிப்பது அல்லது எந்த குழப்பமும் இல்லாத ஒரு இடத்தை எப்படி அடைவது?

சத்குரு: ஆன்மீக பாதையில் நீங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைய வேண்டும் என்று எந்த முயற்சியும் எடுக்க வேண்டாம். நீங்கள் ஒரு "இடம்" என்று தீர்மானிக்க ஆரம்பித்த அந்த நொடி முதல் உங்கள் மனம் ஒரு இடத்தை உருவாக்கும். அதை உங்களுக்கான சொர்க்கமாகவே ஆக்கிவிடுவீர்கள்.

ஆன்மீக பாதை என்பது நீங்கள் உருவாக்கும் மாயையின் ஒரு நிலையில் இருந்து அடுத்த நிலைக்கு செல்வது அல்ல. மாயை முழுவதையும் அழித்து விட்டு வாழ்க்கையை யதார்த்தமாக வாழ்வது. ஏனென்றால், இந்த முயற்சி உண்மையை பற்றியது.

**உங்களுக்கு யாராவது நம்பிக்கை கொடுத்துவிட்டால், நீங்களே இல்லாத பலவற்றை உருவாக்கிக் கொள்வீர்கள். நம்பிக்கை பொய்களை உருவாக்கும் ஒரு வழி. நீங்கள் நம்பிக்கை எதுவும் இன்றி ஆனந்தமாக இருந்தீர்களேயானால் அதுவே சிறந்தது. எது எப்படி வந்தாலும் பரவாயில்லை என்று இருந்தால், கொஞ்ச நாளில் உங்களுக்கு நம்பிக்கை என்பதே தேவை இல்லாதது என்று தோன்றும். ஏனென்றால், உங்களுக்குள்ளே இருக்கும் உன்னதத்தை உணர்ந்துவிட்டீர்கள்**



உண்மை என்பது யதார்த்தமாக இருப்பதே அன்றி நீங்கள் மனதின் மூலம் உருவாக்குவது அல்ல. நான் என் மனதில் ஒரு கடவுளையோ அல்லது ஒரு பிசாசையோ கூட காணலாம். இரண்டுமே தேவையில்லை. உங்கள் கலாச்சாரத்தில் சொல்லிக்கொடுத்ததை சார்ந்துதான் உங்கள் நம்பிக்கையும் இருக்கிறது. சிலருக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறது, சிலருக்கு இல்லை. சிலர் கடவுள் இருக்கிறார் என்று நம்புகிறார்கள், சிலர் கடவுள் இல்லை என்று நம்புகிறார்கள். நீங்கள் நம்பிக்கை உள்ளவராக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நீங்கள் ஒரு மனிதரை பார்க்கும்போது அவரினுள் கடவுள் அல்லது பிசாசு இருப்பதை பார்க்கலாம். ஆனால் உண்மை என்பது அதுவல்ல. உண்மை என்னவென்றால் எதற்காக இங்கே பிறந்தோம், எங்கிருந்து வந்தோம், எங்கே போகிறோம் என்று ஒன்றும் புரியவில்லை. ஆனால், இங்கே இருக்கிறோம் என்பது மட்டும் உண்மை. அதுதான் உங்கள் வாழ்க்கையின் உண்மை நிலை.

எதையும் நம்பாமல் சில மதங்கள் எப்பொழுதும் நம்பிக்கையை மனிதர்களின் மனதில் விதைக்கின்றன. நம்பிக்கை என்பது ஒரு மனிதனுக்கு ஏற்படும் மோசமான விஷயம். இப்போது நிலைமை மோசமாக இருந்தாலும் பரவாயில்லை என்று எதிர்காலத்தை பற்றி மட்டும் சிந்தித்துக்கொண்டு இருப்பீர்கள். நான் மிகவும் நல்லவன், ஆனால் இப்பொழுது ஏழையாக இருக்கிறேன். ஆனால் நான் சொர்க்கத்திற்கு சென்ற பிறகு, கடவுளுடைய மடியில் உட்கார்ந்துகொள்வேன்." இதைத்தான் நான் நம்பிக்கை என்கிறேன்.

உங்களுக்கு யாராவது நம்பிக்கை கொடுத்துவிட்டால், நீங்களே இல்லாத பலவற்றை உருவாக்கிக் கொள்வீர்கள். நம்பிக்கை பொய்களை உருவாக்கும் ஒரு வழி. நீங்கள் நம்பிக்கை எதுவும் இன்றி ஆனந்தமாக இருந்தீர்களேயானால் அதுவே சிறந்தது. எது எப்படி வந்தாலும் பரவாயில்லை என்று இருந்தால், கொஞ்ச நாளில் உங்களுக்கு நம்பிக்கை என்பதே தேவை இல்லாதது என்று தோன்றும். ஏனென்றால், உங்களுக்குள்ளே இருக்கும் உன்னதத்தை உணர்ந்துவிட்டீர்கள்

நிதர்சனத்தில் வாழ்வது என்பது மிக முக்கியமான விஷயம். அனைத்தையும் உங்கள் மனதினால் சிதைத்து பார்க்காமல் உள்ளதை உள்ளபடி பார்த்தால் முக்தி என்பது மிக நெருக்கத்தில் இருக்கும் அடுத்தபடியாகும். நீங்கள் எதுவும் செய்யாமலே காலம் உங்களை அடுத்த நிலைக்கு கொண்டு சேர்க்கும்.

நேர்மறை எதிர்மறை, நல்லது கெட்டது, கடவுள் பிசாசு, சொர்க்கம் நரகம் போன்ற எதையும் நீங்களாக உருவாக்காமல், இருக்கும் நிலைக்கு நீங்கள் வரவேண்டும். ஏனென்றால், அப்படி ஒன்றுமே இல்லை. இவர் நல்லவர் அவர் கெட்டவர் என்ற பாகுபாடுகள் இல்லாமல் உள்ளதை உள்ளபடி பார்க்கும் நிலையை எட்டினால் அதுவே போதும். சில நேரங்களில் சில செயல்களை மேற்கொள்ள, இந்த உருவாக்கம் தேவைப்படும். ஆனால், மற்ற நேரங்களில், உள்ளது உள்ளபடி பார்த்தாலே போதுமானது.

அடுத்தது: உண்மை!

நீங்கள் உள்ளதை உள்ளபடி பார்த்தால் வாழ்க்கை இந்த வடிவத்திலோ வேறு வடிவத்திலோ இல்லை என்று உங்களுக்கு புரியும். அது பிரபஞ்சம் முழுவதும் பரவி இருக்கும். "இது வாழ்க்கை, இது வாழ்க்கை அல்ல, இது உயிருள்ளது, இது உயிரற்றது, இது ஆண், இது பெண்" என்று நீங்கள் எதனுடனும் அடையாளப்படுத்தி கொள்வதை நிறுத்திவிட்டால், இது ஒரு உயிருள்ள பிரபஞ்சம் என்பதை உணர்வீர்கள். உள்ளதை உள்ளபடியே பார்ப்பீர்கள்.

நீங்கள் இந்த உயிருள்ள பிரபஞ்சத்தில் இருக்கும்போது, வாழ்க்கை வேறு விதமாக இருக்கும். அது அழகானது; அசிங்கமானது என்று இருப்பதில்லை. இப்படி அப்படி என்று இல்லாமல் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கும். அனைத்தும் எப்படி இருக்க வேண்டுமோ அப்படிதான் இருக்கும். உங்கள் மனம்தான் எல்லாவற்றையும் சிதைக்கின்றது. அதனை நீங்கள் நிறுத்திவிட்டு உள்ளதை உள்ளபடி பார்த்தால், வாழ்க்கை வெள்ளமென நிகழ்வதை காண்பீர்கள். நீங்கள் கோடி வருடம் இங்கு வாழ்ந்தாலும், அதனை தீவிரத்துடன் கிரகித்துக்கொண்டே இருப்பீர்கள்.

நவீன அறியாலாளர்களும் கூட இந்த பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டுதான் போவதாக குறிப்பிடுகின்றனர். எதற்கும் ஒரு முடிவென்பது இல்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். தற்போது நவீன அறிவியல் படிப்பவர்கள் இதை சொல்வது கொஞ்சம் விசித்திரமாகத்தான் உள்ளது. ஆனால் இதுவரையில் அவர்கள் பார்த்துவந்த விதத்தில் தவறுள்ளதாக அவர்களே உணர தொடங்கியுள்ளனர்.

எனவே, இனி இதுதான் முடிவு என்ற பேச்சுக்கு இடமே இல்லை. ஒருவேளை "இதுதான் முடிவு" என்று வந்துவிட்டால், அப்புறம் என்ன செய்வீர்கள்? நீங்கள் உண்மையின் இருப்பிடத்தை அடைந்துவிட்டால் அதன்பின் ஏது முடிவு? முடிவு என்பது உங்களின் மனதில் வேண்டுமானால் எழலாம், ஆனால் அது நிஜமில்லை. முடிவு என்பது மனதின் இயல்பு. நான் ஒன்றை முடித்துவிட்டு ஓ.. நான் இதை முடித்துவிட்டேன் என்று சொல்லிக்கொள்ளலாம். வாழ்க்கை என்பது எல்லையற்ற சாத்தியம். அதனால்தான் அது அழகாக இருக்கிறது.

## தமிழ்நாடு வேளாண் பல்கலையில் அங்கக வேளாண்மை பயிற்சி

தி கோவை மெயில்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தில் வருகின்ற ஆகஸ்ட் 7 ஆம் தேதி அங்கக வேளாண்மை கட்டண பயிற்சி நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் அங்கக வேளாண்மையின் அடிப்படை நெறி முறைகள், அங்கக மேலாண்மை, அங்கக பூச்சி நோய மேலாண்மை, அங்கக உர நிர்வாகம் மற்றும் அங்ககச் சான்றிதழ், அங்கக இடு பொருட்கள் தயாரிப்பு, அங்கக விளைபொருள்களை சந்தைப்படுத்துதல் ஆகிய தலைப்புகளில் சொற்பொழிவோடு கூடிய செயல் விளக்கங்களும் நடைபெறும்.

இந்த பயிற்சிக்கான கட்டணம் ஜிஎஸ்டி உட்பட ரூபாய் 750 ஆகும். விருப்பமுள்ள விவசாயிகள் 9486734404 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். நேரடியாகவும் வந்து பதிவு செய்து இந்த பயிற்சியில் கலந்து கொள்ளலாம் என்று நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் கேட்டுக் கொண்டனர்.

## ரத்தினம் கல்லூரியில் தொழில் முனைவோர் நிகழ்ச்சி

தி கோவை மெயில்

ரத்தினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ரோட்ராக்ட் கிளப் மற்றும் ஐஐசி இணைந்து நடத்திய தொழில் முனைவோருக்கான நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

இதில் ரத்தினம் கல்லூரியின் தலைவர், மதன் செந்தில் தலைமை தாங்கினார். ரத்தினம் கல்லூரியின் முதன்மை நிர்வாக அதிகாரி மாணிக்கம், கல்லூரி முதல்வர் பாலசுப்பிரமணியம், டீன்கள் சுரேஷ்,சபரீஷ், மகேஷ்பாலகிருஷ்ணன், ஒருங்கிணைப்பாளர் காமாட்சி முத்துலட்சுமி ஆகியோர் இணைந்து இவ்விழாவை சிறப்பித்தினர்.

இதில் வழிகாட்டி மற்றும் பயிற்றுனரான சௌக்கத், இந்தியாவின் முதல் 10 மனநிலை வடிவமைப்பாளர் தீபக் ராஜ்குமார், தங்க பட்டறையின் முதல் தொழில் முனைவோர் மனோகர் மாசானம், ஐடியா குரு தீர்வுகள் நிறுவனர் சீனிவாசன், கோயம்புத்தூர் மற்றும் டோட்டல் தீர்வுகள் நிறுவனர் செல்வகுமார் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றி, கருத்துகளைப் பகிர்ந்தனர்.

### ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரிக்கு

## சிறந்த சாலை பாதுகாப்பு பங்களிப்புக்கான விருது

தி கோவை மெயில்

இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த எப்.ஐ.சி.சி.ஐ. சாலை பாதுகாப்பு விருது, பல்வேறு சாலை பாதுகாப்பு துறையில் சிறந்த பங்களிப்புகளை வெளிப்படுத்திய ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட சிறப்பு சாலை பாதுகாப்பு பணி, குழுவின் கல்வி பங்குதாரர் என்கின்ற முறையில் கல்லூரியின் சிவில் இன்ஜினியரிங் துறையைச் சார்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆய்வை மேற்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து, கோவையில், சாலை விபத்துகளை குறைப்பதில் முக்கிய பங்கு வகித்து, பல்வேறு சாலை பாதுகாப்பு விதிகளை பரிந்துரைப்பதில் சிறப்பாக பணிபுரிந்த ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியைத் தேர்ந்தெடுத்து சிறந்த சாலை பாதுகாப்பு பங்களிப்பு விருது வழங்கினர். இந்தியா முழுவதிலிருந்து கலந்து கொண்ட கல்வி நிறுவனங்களில் ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி மட்டும் விருது பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



விருதுபெற்ற குழுவினரை பாராட்டிய எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாராயணசுவாமி.

புதுடெல்லியில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் ஒடிசா அரசின் நீர்வளம், வணிகம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் ஸ்ரீமதி துகுனி சாஹு, புதுதில்லியில் உள்ள எப்.ஐ.சி.சி.ஐ நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மன்றத்தின் தலைவர் ராஜீவ் பிரதாப் ரூடி ஆகியோர் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய கல்லூரியின் பேராசிரியர் ஹேமா மற்றும் சிவில் இன்ஜினியரிங் துறை மாணவர்கள் ராகுல் பிரசாத், தக்ஷின், சுமன் ஆகியோர்க்கு விருது வழங்கினார்கள்.

மேலும் எஸ். என். ஆர் சன்ஸ் சாரிட்டபிள் டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாராயணசுவாமி, கல்லூரி முதல்வர் முனைவர் அலமேலு, சிவில் இன்ஜினியரிங் துறை தலைவர் சரோஜினி ஆகியோர் விருது பெற்றவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

### கோ-ஆப்டெக்ஸ் சார்பில்

## கே.ஐ.டி. கல்லூரியில் கைத்தறி விழிப்புணர்வு

தி கோவை மெயில்

கைத்தறி ரகங்கள் பற்றிய விழிப்புணர்வை இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் வகையில் கைத்தறித்துறை அமைச்சர் காந்தி சட்டப்பேரவையில் அறிவித்தபடி, கோஆப்டெக்ஸ் நிறுவனம், மாநிலம் முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக கோவை கலைஞர் கருணாநிதி தொழில்நுட்ப கல்லூரியில் (கே.ஐ.டி) கைத்தறி துறை மற்றும் கோஆப்டெக்ஸ் சார்பாக கைத்தறி பற்றிய விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த முகாமில் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு வகையான பட்டுப் புடவைகள், பருத்திப் புடவைகள், புவிசார் குறியீடு பெற்ற கைத்தறி ரகங்கள், ஹோம் டெக்ஸ்டைல்ஸ் ரகங்கள், நாகரீக பைகள், துப்பட்டாக்கள் போர்வைகள், தலையணை உறைகள் மற்றும் துண்டுகள் முதலிய துணிவகைகள் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், மாணவர்களுக்கு கைத்தறியின் சிறப்பினை அறிமுகப்படுத்தும் நோக்கில் கைத்தறி துணிகள் கண்காட்சியும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி துணைத்தலைவர் இந்து முருகேசன், கண்ணம்பாளையம் டவுன் பஞ்சாயத்து தலைவர், கோ ஆப்டெக்ஸ் பொது மேலாளர் வாசு, மண்டல மேலாளர் நந்தகோபால், கைத்தறித் துறை உதவி இயக்குனர் சிவக்குமார், துறை சார்ந்த அதிகாரிகள், கோஆப்டெக்ஸ் ஊழியர்கள் மற்றும் கைத்தறி கூட்டுறவு சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கல்லூரியில் நடைபெற்ற கைத்தறி விழிப்புணர்வு முகாமினை பார்வையிடுகிறார் கே.ஐ.டி. கல்லூரின் தலைவர் பொங்கலூர் பழனிசாமி.

## கே.பி.ஆர். மில் லிமிடெட் சார்பில் த்ரோ பால் போட்டி

தி கோவை மெயில்

கே.பி.ஆர். மில் லிமிடெட் சார்பில், 'ஸ்ரீ பழனிசாமி கவுண்டர் செல்லம்மாள் நினைவு கோப்பை 2023' மில் பெண் பணியாளர்களுக்கான 'த்ரோ பால் போட்டி' ஞாயிற்றுக்கிழமை மில் லிமிடெட் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் கே.பி.ஆர். மில்லின் வெவ்வேறு பிரிவுகளில் இருந்து 9 அணிகள் கலந்துகொண்டது.

இதில் இறுதிச்சுற்றுக்கு குவாண்டம் நிட்ஸ் 3 தெக்கலூர் மற்றும் குவாண்டம் நிட்ஸ் அரசூர் ஆகிய அணிகள் போட்டியிட்டது, இறுதியில் குவாண்டம் நிட்ஸ் -3 தெக்கலூர் வெற்றிப்பெற்று ஸ்ரீ பழனிசாமி கவுண்டர் செல்லம்மாள் நினைவு கோப்பையை தட்டிச்சென்றது.

அதனைத் தொடர்ந்து, நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கே.பி.ஆர். மில் லிமிடெட் செயல் இயக்குநர் சி.ஆர். ஆனந்தகிருஷ்ணன் கலந்துகொண்டு வெற்றப்பெற்ற அணிக்கு கோப்பையினை வழங்கினார்.

மேலும் இதில் மில்லில் பணிபுரியும் பெண்கள் மற்றும் ஊழியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## இந்துஸ்தான் கல்விக் குழுமங்களின் நிர்வாக அறங்காவலர்



## Dr.சரஸ்வதி கண்ணையன் அவர்களுக்கு

# கொங்கு மாமணி விருது



இந்துஸ்தான் கல்விக் குழுமங்களின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் அவர்களுக்கு தீரன்சின்னமலை நினைவுப் பரிசினை வழங்குகிறார் கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் சட்ட மன்ற உறுப்பினருமான ஈ.ஆர்.ஈஸ்வரன். உடன், (வலமிருந்து) இந்துஸ்தான் நிறுவனங்களின் தலைவர் டி.எஸ்.ஆர்.கண்ணையன், குமரகுருபர அடிகளார், கே.பி.ஆர். குழுமங்களின் தலைவர் கே.பி.ராமசாமி.

தி கோவை மெயில்

இந்துஸ்தான் கல்விக் குழுமங்களின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் அவர்களுக்கு, கொங்கு நண்பர்கள் சங்கம் சார்பாக "கொங்கு மாமணி" விருது வழங்கப்பட்டது.

கொங்கு நண்பர்கள் சங்கம் கடந்த 65 வருடங்களாக செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் சார்பாக ஒவ்வொரு வருடமும் விவசாயம், தொழில் துறை, கல்வித் துறை மற்றும் சமூக சேவையில் சிறந்து விளங்கும் நபர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பித்து வருகிறது. அந்த வகையில் இந்த வருடத்திற்கான விருதுகள் வழங்கும் விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் இந்துஸ்தான் கல்வி குழுமத்தின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் அவர்களுக்கு "கொங்கு மாமணி" விருதினை கோவை கே.பி.ஆர். குழுமங்களின் தலைவர் கே.பி.இராமசாமி வழங்கினார்.

கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஈ.ஆர்.ஈஸ்வரன், தீரன்சின்னமலை அவர்கள் உருவம் பொறித்த நினைவுப் பரிசினை வழங்கிக் கௌரவித்தார்.

இவ்விழாவில் சி.பி.ஐ. முன்னாள் இயக்குனர் டி.ஆர். கார்த்திகேயன், கொங்கு குளோபல் அமைப்பின் தலைவர் ரத்தினசபாபதி, இந்துஸ்தான் குழுமங்களின் தலைவர் டி.எஸ்.ஆர். கண்ணையன் மற்றும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர் கே.கே.ரமேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# கர்ப்பப்பையில் கட்டியா? கவலை வேண்டாம்!

## கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில் சிறப்பு முகாம்

தி கோவை மெயில்

பெண்களுக்கு ஏற்படும் எந்த சாதாரண விஷயமாக இருந்தாலும் அலட்சியப்படுத்தி விடக் கூடாது. மாதவிடாய் காலங்களில் சிலருக்கு அதிக வலி ஏற்படும். அதிக அளவில் உதிர போக்கு இருக்கும். இது சாதாரண விஷயம் தானே என நினைக்காதீர்கள், அதில் ஏதேனும் சிக்கல் இருக்கலாம் அடிக்கடி சிறுநீர் கழித்தல், மலம் கழிப்பதில் சிரமம், அடிவயிற்றில் எப்போதும் நிறைந்திருப்பது போன்ற உணர்வு இருத்தல் போன்றவைகளும் கூட கர்ப்பப்பை கட்டி இருப்பதற்கான அறிகுறிகளாக இருக்கலாம்.

கர்ப்பப்பை கட்டி (Fibroid) என்பது, பெண்களுக்கு சாதாரணமாக காணப்படும் ஒரு ஆபத்து இல்லாத கட்டி. இது சாதாதரண கட்டி தானே என அலட்சிப்படுத்தினால், கர்பப்பபையைக் கூட அகற்றப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும். எனவே, சிறிய பிரச்னை இருந்தாலும், அதை தீர்க்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் எவ்வித நோயும் இல்லாமல் நலமுடன் ஆரோக்கியமாக வாழலாம்.

**நவீன சிகிச்சை:**

கர்ப்பப்பையில் ஏதாவது பிரச்னை என்றால், அதனை அகற்றி விடலாம் என்ற எண்ணம் சிலருக்கு வரலாம். நம் உடலில் இருக்கும் ஒவ்வொரு பொருளும் அவசியமானவை. எளிதாக குணப்படுத்தக்கூடிய இந்த கட்டியை, தழும்புகள் இல்லாமல், சிகிச்சை செய்த சுவடே இல்லாமல், ஆஞ்சியோகிராம் முறையில் குணப்படுத்த முடியும். கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் அதிநவீன முறையில் சிகிச்சைக்கான கருவிகள் உள்ளன.




எளிமையான முறையில், சிகிச்சை செய்து உடல் நலத்துடன் வாழலாம். பரிசோதனையின் போது கர்ப்பப்பை கட்டி இருப்பது கண்டறியப்பட்டால், தகுந்தசிகிச்சை அளிக்க மருத்துவர்கள் ஆலோசனை வழங்குவர். இதற்கும் கட்டண சலுகை உண்டு. வழக்கமான அறுவை சிகிச்சைக்கு பதிலாக, இந்த கட்டிக்கு நவீன தழும்பு இல்லாத சிகிச்சை மேற்கொள்ளப்படும். உங்களது கர்பப்பையை காத்திட இது ஒரு அருமையான வாய்ப்பு.

**இந்த கட்டியை கண்டறிய ஒரு வாய்ப்பு:**

கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவனையில் உள்ள கதிர்வீச்சியல் துறையில் ஆகஸ்ட் 7 முதல் செப்டம்பர் 2 வரை சிறப்பு முகாம் நடக்கிறது. முகாமில் பரிசோதனையை சலுகை கட்டணத்தில் செய்து கொள்ளலாம். டாக்டர்கள் தக்க ஆலோசனைகளை மேற்கொள்வீர்கள். ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை இந்த முகாம் நடக்கிறது. ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்களில் இந்த பரிசோதனை முகாம் இருக்காது. மேலும் விபரங்களுக்கு மற்றும் முன் பதிவுக்கு: 733 9333 485.

## போலீசாருக்கு தொடர் ஓட்டபந்தயம்

தி கோவை மெயில்

கோவை ஆயுதப்படை மைதானத்தில் போலீசாருக்கான 48 நாள் 2 கி.மீ. தொடர் ஓட்டப்பந்தயத்தை மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன் அண்மையில் தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், காலை, மாலை என்று பாராமல் நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஓட்டப்பயிற்சியில் ஈடுபடுவது உடலுக்கு ஆரோக்கியம் தரும். இவ்வாறு 21 அல்லது 48 நாட்கள் தொடர்ச்சியாக ஓட்டப்பயிற்சி செய்து வந்தால், இது அவர்களின் தினசரி வாழ்வில் ஒரு பழக்கமாகவே மாறி விடும். இதனால் போலீசாருக்கு மனஅழுத்தம் குறைந்து, உடல் நலமும் மேம்படும் என்று கூறினார்.

கோவை ஆயுதப்படை மைதானத்தில் ஓட்டப்பந்தயப் போட்டியில் முதற்கட்டமாக 1000 போலீசார் பங்கேற்க முன்வந்து உள்ளனர்.

# வேலைவாய்ப்பு உருவாக்கி தருவதே அரசின் நோக்கம் அமைச்சர் சி.வி.கணேசன் பேச்சு



இளைஞர் ஒருவருக்கு பணி ஆணையினை வழங்குகிறார்கள் அமைச்சர்கள் முத்துசாமி மற்றும் சிவி.கணேசன். அருகில் மாவட்ட ஆட்சியர் கிரந்தி குமார், கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பத்ரி நாராயணன், கல்லூரியின் செயலர் சி.ஏ.வாசுகி.

தி கோவை மெயில்

தமிழ்நாடு அரசு சார்பில், கோவை கவுண்டம்பாளையத்தில் உள்ள கொங்கு நாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி தனியார் துறையின் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சர் சி.வி.கணேசன், வீட்டு வசதி வாரிய துறை அமைச்சர் முத்துசாமி ஆகியோர் இந்த முகாமில் கலந்து கொண்டு இளைஞர்களுக்கு பணி ஆணையினை வழங்கினர்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் சி.வி. கணேசன், தமிழக முதலமைச்சர் ஆணைப்படி 1லட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2வது வேலை வாய்ப்பு முகாம் இன்று கோவையில் நடைபெற்றுள்ளது. 8 ஆம் வகுப்பு தேர்ச்சியடைந்த வர்களுக்கு இந்த வேலைவாய்ப்பு முகாம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 20 ஆயிரம் இளைஞர்கள் இந்த முகாமில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கின்றோம். டிசம்பர் மாத இறுதிக்குள் 100 வேலைவாய்ப்பு முகாம் நடத்தி முடிக்கப்படும்.

7அரை லட்சம் பேர் இதுவரை நடந்த வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்டுள்ளனர். வேலை இல்லை என்பதை போக்கி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கி தருவதே எங்களது நோக்கம். மாற்று திறனாளிகக்கு இனி வரும் முகாமில் அதிகம் கவனம் செலுத்துவோம் என தெரிவித்தார்.

## HP introduces LaserJet Pro Multi-function-printers

✍ The Covai Mail

HP India has introduced the LaserJet Pro MFP 4104 printer series, catering to Indian businesses with cost-effective and high-quality printing, scanning, and copying capabilities.

The series includes three variants: HP LaserJet Pro MFP 4104 dw (Duplex and Wireless), fdn (Fax, Duplex, and Network), and fdw (Fax, Duplex, and Wireless).

These printers offer fast printing speeds of up to 40 pages per minute and a paper capacity of up to 900 sheets, enhancing operational efficiency.

With automatic duplex printing and single-pass dual-side scanning, paper usage is minimized, saving time and costs. Engineered for high-volume printing needs, the series ensures sharp text and graphics with up to 9800-page toner yield.

The printers feature wireless connectivity options like dual-band Wi-Fi and Bluetooth, and HP Roam-enabled capabilities for remote printing. HP Eco-smart black toner provides superior printing and energy savings of up to 22%.

The printers are available through HP's eStore and authorized partners, with a three-year in-built warranty and HP Wolf Essential security.

## KIT Attains Coveted A++ Grade in NAAC Accreditation

✍ The Covai Mail

In a remarkable achievement, Karpagam Institute of Technology (KIT) has been accredited with the highest grade, A++, by the National Assessment and Accreditation Council (NAAC).

The A++ grade highlights the institution's exceptional infrastructure, faculty expertise, innovative teaching methods, and robust student support systems.

## VLBJCAS Hosts Induction Programme for PG First-Year Students

✍ The Covai Mail

VLB Janakiammal College of Arts and Science recently organized an Induction Programme for PG first-year students. Beena, Head of the Department of Management (PG), warmly welcomed the gathering.

In his Presidential address, Vasudevan, Vice-Principal, praised the students for making the right choice and emphasized the importance of higher studies and skill development in all areas. He also highlighted various job opportunities and entrepreneurship options.

Moreover, he encouraged the students to self-motivate and self-evaluate to develop their personalities and attitudes. Suresh, Head of the Department of Tamil, delivered an inspiring speech, adding to the occasion's significance.

